


# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்



## THE WORD OF CHRIST

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3 : 16

மரம் 1 பிப்ரவரி 2001 கனி 3

ஆசிரியர்
B. அர்ஜுனன்

## ஆசிரியர் கடிதம்

*வாசகர்களுக்கு,*

நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் பரிசுத்த நாமத்தில் வாழ்த்துக்கள். முதலாவது கருத்தரங்கம் கடந்த ஜனவரி மாதம் 27ம் தேதி மிக சிறப்பாக நாகர்கோவில் பகுதியில் நடைபெற்றது. சில சகோதர, சகோதரிகள் வந்து கலந்து கொண்டனர். ஆறு சகோதரர்கள் பத்திரிக்கையை குறித்த ஆலோசனையை பகிர்ந்து கொண்டனர். இக்கூட்டங்களை சகோ. அந்தோணிசாமி அவர்கள் பொறுப்பேற்று சிறப்புடன் நடத்திக் கொடுத்தார்கள்.

கர்த்தருக்கு சித்தமானால் அடுத்த இரண்டாவது கருத்தரங்கம் ஏப்ரல் மாதம் 28ம் தேதி திருச்சி பகுதியில் சகோ. தானியேல் துரைராஜன் அவர்கள் முன்னிலையில் நடைபெறும் ஜெபியுங்கள்.

*"நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார் எனக்கும் சீஷராயிருப்பீர்கள்"* (**யோவான் 15 : 8**) *என இயேசு கூறுகிறார்.*

தொடர்புக்கு :
**B. Arjunan,** Editor
P.O. Box : 5, Batlagundu 624202.
Dindigul Dist, Tamilnadu, India. ✆ : 04543 - 23278

அன்புடன்
**ஆசிரியர்**

**இதழின் உள்ளே . . .** **பக்கம்**

| | | |
|---|---|---|
| 1. | நல்ல போராட்டம் | 1 |
| 2. | மாறுபாடான சுவிசேஷப் போதனை | 5 |
| 3. | பொது அறிவுக் களஞ்சியம் | 7 |
| 4. | தெரிந்து கொள்ளுங்கள் | 8 |
| 5. | ஒரு வழி பாடம் | 10 |
| 6. | சிறுவர் பகுதி | 12 |
| 7. | பெண்கள் பகுதி | 14 |
| 8. | படங்களும் சுருக்கமான வர்ணனைகளும் | 17 |
| 9. | அந்த நாளையும், அந்த நாழிகையும் . . . | 18 |
| 10. | புதிய ஏற்பாடு புத்தகங்களுக்கு குறிப்புகள் | 20 |

FOR FREE DISTRIBUTION

"Go ye into all the world, and preach the gospel to every creature" mark 16:15

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202.
SOUTH INDIA.

தி வேர்ட் ஆப் கிறைஸ்ட்

THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் 1 பிப்ரவரி 2001 கனி 3

ஆசிரியருரை

# நல்ல போராட்டம்
## *A good Fight*




இந்த உலகத்தில் எத்தனையோ விதமான போராட்டங்களைக் குறித்து நாம் கேள்விப்படுகிறோம். அவைகளை நமது அநுதினஜீவியத்திலும் காண்கிறோம். இப்படிப்பட்ட போராட்டங்கள் எல்லாம் வன்முறையை தூண்டவும், அநேகரை தவறான பாதையிலும் இழுத்துச்செல்கிறது. இவைகளால் மனிதனுக்கு எந்த விதத்திலும் நன்மைகிடைக்கப் போவதில்லை. பரிசுத்த வேதாகமத்தில் இயேசுவின் சீஷர்களில் ஒருவனான அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுக்கு கூறுவதை கவனியுங்கள். "நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப் பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்" (2 தீமோ 4:7,8) என்கிறார். பவுல் நிச்சயமற்ற ஒரு மனிதனைப் போல இல்லாமல் நல்ல போராட்டத்தை போராடினேன் என்று குறிப்பிடுகிறார். இந்நாட்களிலே இந்த பவுலைப் போல நீங்கள் நல்ல பேராட்டத்தை போராடுகிறீர்களா? சற்று சிந்தித்துப்பாருங்கள்.

நம்முடைய போராட்டமானது நம்பிக்கையுள்ளதாகவும் அது இச்சையடக்கம் நிறைந்ததாயும் காணப்பட வேண்டும். ஏனென்றால் "பந்தயசாலையில் ஓடுகிறவர்களெல்லாரும் ஓடுவார்கள், ஆகிலும் ஒருவனே பந்தயத்தைப் பெறுவானென்று அறியீர்களா? நீங்கள் பெற்றுக் கொள்ளத்தக்கதாக ஓடுங்கள் பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருப்பார்கள், அவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறார்கள். நாமோ அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம்". (1கொ. 9:24, 25). உலகப்பிரகாரமான பந்தயத்திற்குப் போராடுகிறவர்களே எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருக்கும் போது அழிவில்லாத வாடாத கிரீடத்தைப் பெறப்போகிற நமக்கு எவ்வளவு இச்சையடக்கம் இருக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. இங்கு யோசேப்பை

கவனித்துப்பாருங்கள். போத்திபாரின் மனைவி யோசேப்பின் மேல் கண்போட்டு தன்னோடே சந்தோஷமாக இருக்கும்படி நித்தம், நித்தம் அவனை பலவந்தப்படுத்திக் கொண்டு வந்தாள் அவனோ! தன் எஜமானுடைய மனைவியின் சொல்லுக்கு இணங்காமல், அவளை நோக்கி "நான் இத்தனை பெரிய பொல்லாங்குக்கு உடன்பட்டு தேவனுக்கு விரோதமாய்ப் பாவம் செய்வது எப்படி என்றான்" (ஆதி 39:9)

இச்செய்தியை வாசிக்கும் பிரியமான சகோதரனே, சகோதரியே நியாயப்பிரமாணமாகிய பத்து கட்டளை கொடுக்கப்படுவதற்கு முன்பு வாழ்ந்த யோசேப்பு பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியா திருப்பாயாக என்ற கற்பனையை அன்றே அவன் கடைபிடித்துள்ளான் என்று பார்க்கிறோம். பூரணமான கட்டளைகளைப் பெற்றுள்ள நாம் இன்று எப்படி போராடுகிறோம். "பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே" (எபி. 12:14) என்ற வசனத்தை நாம் அடிக்கடி நினைவு கூறவேண்டியவர்களாயிருக்கின்றோம். யோசேப்பு தேவனுக்கு பயந்தான். அவனைப்போல நாமும் தேவனுக்கு பயந்து அவர் கற்பனைகளைக் கைக்கொண்டு நடப்போம்.

நம்முடைய போராட்டமானது ஆற்று வெள்ளத்தில் எதிர் நீச்சல் போடும் மீன்களைப்போல பாவத்தை எதிர்க்கிறதாக இருக்க வேண்டும். "பாவத்திற்கு விரோதமாய்ப் போராடுகிறதில் இரத்தஞ்சிந்தப்படத்தக்கதாக நீங்கள் இன்னும் எதிர்த்து நிற்கவில்லையே" (எபி.12:4) என்று எபிரேய ஆசிரியர் குறிப்பிடுகிறார். ஆம்!. ஸ்தேவான், பவுல் போன்றோரெல்லாம் கிறிஸ்துவின் வசனத்தினிமித்தம் கல்லெறியுண்டார்கள், சவுக்கால் அடிக்கப்பட்டார்கள். மேலும் நம் முற்பிதாக்களும் "மேன்மையான உயிர்த்தெழுதலை அடையும்படிக்கு, விடுதலைபெறச் சம்மதியாமல் வாதிக்கப்பட்டார்கள், வேறுசிலர் நிந்தைகளையும் அடிகளையும் கட்டுகளையும் காவலையும் அனுபவித்தார்கள்" (எபி. 11:35, 36) என்று வாசிக்கின்றோம். இக்காலகட்டத்தில் வாழ்கிற நாம் எவ்விதமான போராட்டத்தை அனுபவிக்கின்றோம். இவர்கள் அநுபவித்த துன்பங்களில் சிறிதளவு கூட நாம் இதுவரை அநுபவியாமல் இருக்கின்றோம். யாரும் கேட்டால் கர்த்தர் எங்களை எல்லாக் கட்டுகளுக்கும் விடுதலையாக்குகிறார் என்று பொய் சொல்லிக் கொண்டு பாவத்திற்கு பங்காளர் களாயிருக்கின்றோம். "நீங்கள் தேவனுடைய ராஜ்யத்தினிமித்தம் பாடு அநுபவிக்கிறவர்களாயிருக்க அந்த ராஜ்யத்திற்கு நீங்கள் பாத்திரரென்றெண்ணப்படும்படிக்கு, தேவன் நியாயமான தீர்ப்புச் செய்கிறவரென்பதற்கு அதுவே அத்தாட்சியாயிருக்கிறது" (2 தெச. 1:5). ஆகையால், நீங்கள் தேவனுடைய ராஜ்யமாகிய சபையின் நிமித்தம் பாடு அநுபவிக்கிறவர்களாயிருந்தால் அவைகளை சந்தோஷமாக ஏற்றுக் கொள்ளுங்கள். ஏனென்றால் அந்தபாடுகளே நமக்கு அத்தாட்சி யாயிருக்கிறது. நாம் "அவரோடேகூடப்பாடுகளைச் சகித்தோமானால் அவரோடே கூட ஆளுகையும் செய்வோம்; நாம் அவரை மறுதலித்தால், அவரும் நம்மை மறுதலிப்பார் (2 தீமோ. 2:12).

நம்முடைய போராட்டமானது சட்டத்தின்படியானதாக இருக்க வேண்டும். ஒருவன் மல்லயுத்தம் பண்ணினாலும், சட்டத்தின்படி

பண்ணாவிட்டால் முடிசூட்டப்படான். பிரயாசப்பட்டு பயிரிடுகிறவன் பலனில் முந்திப்பங்கடைய வேண்டும்" (2 தீமோ 2:5,6) என்ற பவுலின் வார்த்தைப்படி ஆவிக்குரிய பட்டயமாகிய வேத வசனத்தை எடுத்துக் கொண்டு அதன்படி போராட வேண்டும். நமது ஆண்டவர் பிசாசுடன் போராடும் போது "அப்பாலே போ சாத்தானே, உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே" (மத். 4:10) என்ற வசனத்தை எடுத்துக் கொண்டு போராடினார். "நீங்கள் கிறிஸ்துவின் நாமத்தின் நிமித்தம் நிந்திக்கப்பட்டால் பாக்கியவான்கள். ஏனெனில் தேவனுடைய ஆவியாகிய மகிமையுள்ள ஆவியானவர் உங்கள் மேல் தங்கியிருக்கிறார். அவர்களாலே தூஷிக்கப்படுகிறார். உங்களாலே மகிமைப்படுகிறார். ஆதலால் உங்களில் ஒருவனும் கொலை பாதகனாயாவது, திருடனாயாவது., பொல்லாங்கு செய்தவனாயாவது அந்நிய காரியங்களில் தலையிட்டுக் கொண்டவனாயாவது பாடுபடுகிறவனாயிருக்கக் கூடாது. ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன்" (1 பேது 4:14-16) சட்டத்தின்படி போராடும்போது தேவநாமம் மகிமைப்படக்கூடியதாக இருக்கிறது. "தீமை செய்து பாடநுபவிப்பதிலும், தேவனுக்குச் சித்தமானால் நன்மை செய்து பாடநுபவிப்பதே மேன்மையாயிருக்கும்" (1 பேது 3:17).

நம்முடைய போராட்டத்தின் ஆயுதமானது வேத வசனத்தின்படி இருக்க வேண்டும். "நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக் கொள்ளுங்கள். ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகாரலோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப்போராட்டம் உண்டு. ஆகையால், தீங்குநாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்து முடித்தவர்களாயும் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள். சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும், நீதியென்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாயும், சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும், பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப் போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் தலைச்சீராவையும், தேவவசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள் எந்தச்சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி அதன் பொருட்டு மிகுந்த மனஉறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக் கொண்டிருங்கள்" (எபே. 6:11-18). நீங்கள் இப்படிப்பட்ட ஆயுதத்தை தரித்திருக்கிறீர்களா? உங்களுடைய போராட்டத்துக்கு வேண்டிய ஆயுதமானது மேற்கண்ட வேதவசனத்தின்படி சத்தியத்தை நீங்கள் உடுப்பாக தரித்து உண்மையின் பிரதிபலிப்பாகவும், ஒருக்காலும் பொய்யுரையாத தேவனுடைய வழியில்

இருக்கிற நீங்கள் நீதியை மார்க்கவசத்தைப் போல தரித்தும், எங்கு சென்றாலும் பாதரட்சையை தொடுத்துக்கொள்வதுபோல சுவிசேஷத்தை எல்லா இடங்களிலும் எடுத்துச்செல்கிறவர்களாகவும், பிசாசினுடைய காரியங்களை முற்றிலும் அழித்துப்போட ஆபிரகாமுடைய விசுவாசத்தைப் பற்றிக் கொண்டும், ஞானஸ்நானத்திற்கு பின்பு கிடைக்கப்பெற்ற அந்த இரட்சிப்பை தலையைக் காக்கும் கவசத்தைப் போல பாதுகாத்து, "ஒருவன் போதித்தால் வேதவாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்" (1பேது 4:11) என்ற வசனப்படி தேவவசனமாகிய ஆவியின் பட்டயத்தையும், எடுத்துக் கொண்டு எந்தச் சமயத்திலும் ஜெபத்தோடும், வேண்டுதலோடும் விழித்திருங்கள். இப்படி செய்தால் பிசாசு உங்களை விட்டு ஓடிப்போவான். நீங்களும் கிறிஸ்துவுக்கேற்ற நல்ல போர்ச் சேவகனாயிருப்பீர்கள்.

உங்களுடைய போராட்டமானது உலகமக்களைப் போல தேவ சமூகத்தில் காணப்பட்டால். அவர் "நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை ; அக்கிரமச் செய்கைக்காரரே என்னை விட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்" (மத் 7:23) என்கிறார். பிரியமானவர்களே, உங்கள் போராட்டம் எப்படி உள்ளது? "நீங்கள் ஒருவரையொருவர் கடித்துப்பட்சித்தீர்களானால் அழிவீர்கள், அப்படி ஒருவராலொருவர் அழிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்" என்று (கலா 5:15)ல் வாசிக்கின்றோம் இன்றைய நாட்களில் எங்குபார்த்தாலும் போட்டிகளும், பொறாமைகளும், சுளியாட்டுகளும் பெருகிகொண்டே போகிறதை பார்க்கின்றோம். இப்படிப்பட்ட காரியங்களில் நாம் சிக்கி கொள்ளாமல், நம்முடைய போராட்டத்தை ஆவிக்குரிய போராட்டமாக, அதாவது "நாம் ஆவியினாலே பிழைத்திருந்தால் ஆவிக்கேற்றபடி நடக்கவும் கடவோம்" (கலா 5:25) என்ற வசனப்படி எண்ணங்களையும், இச்சைகளையும் கிறிஸ்துவுக்குகீழ்படுத்தி நாம் ஆவிக்குரியவர்கள் என்பதை உணர்ந்து ஆவிக்குரிய ஆயுதங்களை தரித்துக்கொண்டு நித்திய ஜீவனுக்கு ஏதுவாக கிரியை நடப்பிப்போம்.

நல்ல போராட்டத்தை போராடி நம்முடைய ஓட்டத்தை முடித்து, விசுவாசத்தைக் காத்துக் கொண்டால், நீதியுள்ள நியாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே நமக்கு நீதியின் கிரீடத்தைக் கொடுப்பார். இக்கிரீடத்தைப் பெற்றுக்கொள்ள இன்றே தீர்மானம் செய்வீர்களா? மனதளவில் தீர்மானித்து அதை கனவாக்கிவிடாதீர்கள். பவுல் கூறும் போது "நான் நிச்சயமில்லாதவனாக ஓடேன்; ஆகாயத்தை அடிக்கிறவனாகச் சிலம்பம்பண்ணேன். மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்" (1கொ. 9:26, 27) என்கிறார். ஆகாயத்திலே சிலம்பம்பண்ணினால் பிரயோஜனம் ஒன்றுமில்லை. நாம் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நின்று மாமிசஇச்சைகளுக்கு அடிபணியாமல் நல்ல போராட்டத்தை போராட உங்களை ஒப்புக் கொடுங்கள் கர்த்தர் தாமே உங்களுக்கு சகல ஞானத்தையும் பெலத்தையும் தருவாராக.

# மாறுபாடான சுவிசேஷப் போதனை
# PREACHING ANOTHER GOSPEL

**J.C. Choate**



நற்செய்தி என்னவென்று பவுல் அறிவார்; ஏனெனில் அந்த நற்செய்தியை அவர் போதித்திருந்தார். கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்ப்பு (கொரி. 15:1-4) ஆகியவைகளும், இரட்சிக்கப்பட ஒருவர் கீழ்ப்படிய வேண்டிய கட்டளைகளும் (மாற்கு (16:16; அப்.2:38) அந்த நற்செய்தியாக இருந்தது. கர்த்தரில் விசுவாசம் வைத்து, தனது பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு, கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என அறிக்கை செய்து, தண்ணீரில் திருமுழுக்கிற்காக அடக்கம் செய்யப்படும்போது ஒருவர் நற்செய்திக்குக் கீழ்ப்படிகிறார் (2பேதுரு 4:17). அதுமட்டுமல்லாமல், கர்த்தரின் மரணம், அடக்கம், உயிர்ப்பு ஆகியவற்றை தனது கீழ்ப்படிதலின் மூலமாக நிழற்படமாகக் காட்டுகிறார்.

கலாத்தியர்களுக்கு எழுதும்போது, பவுல் சொன்னார்: உங்களைக் கிறிஸ்துவின் கிருபையினாலே அழைத்தவரை நீங்கள் இவ்வளவு சீக்கிரமாய் விட்டு, வேறொரு சுவிசேஷத்திற்குத் திரும்புகிறதைப் பற்றி நான் ஆச்சரியப்படுகிறேன்; வேறொரு சுவிசேஷம் இல்லையே; சிலர் உங்களைக் கலகப்படுத்தி, கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப் புரட்ட மனதாயிருக்கிறார்களேயல்லாமல் வேறல்ல.

"நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப் பட்டவனாயிருக்கக்கடவன். முன் சொன்னதுபோல் மறுபடியும் சொல்லுகிறேன்; நீங்கள் ஏற்றுக்கொண்ட சுவிசேஷத்தையல்லாமல் வேறொரு சுவிசேஷத்தை ஒருவன் உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்" (கலாத்தியர் 1:6-9)

இப்போது, பவுல் கூறியவற்றை நீங்கள் கேட்டு, புரிந்து கொண்டீர்களா? கலாத்திய கிறிஸ்தவர்கள், கிறிஸ்துவின் ஒரே நற்செய்தியை கேட்டிருந்த போதிலும் அவர்கள் அதி விரைவிலேயே சத்தியத்தை விட்டு விலகி வேறொரு "சுவிசேஷத்தை" ஏற்றுக்கொண்டதால் ஆச்சரியப்பட்டதாக அவர் சொன்னார். அந்த "சுவிசேஷம்" ஒரு தவறான செய்தியாகவும், ஒரு கள்ள உபதேசமாகவும், இரட்சிக்கக் கூடாததாகவும் இருந்திருக்கும். அவரே ஆனாலும்கூட அல்லது வானத்திலிருந்து வரும் தூதனாகிலும், அவர்கள் ஏற்கனவே ஏற்றுக்கொண்டதற்கு மாறாக

வேறொரு சுவிசேஷத்தைப் பிரசங்கித்தால் அந்தக் கள்ளப்போதகன் சபிக்கப்பட்டிருப்பான் என பவுல் திடமாக எச்சரித்தார். அவர் ஏற்கனவே சொன்னதற்கு அழுத்தம் கொடுக்கும் விதத்தில் பவுல் மீண்டும் கூறினார்: "முன் சொன்னது போல் மறுபடியும் சொல்லுகிறேன்; நீங்கள் ஏற்றுக்கொண்ட சுவிசேஷத்தையல்லாமல் வேறொரு சுவிசேஷத்தை ஒருவன் உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனா யிருக்கக்கடவன்"

எனது நண்பர்களே, இதைவிடத் தெளிவான வேறு எச்சரிக்கை இருக்கக்கூடுமா? ஒரே நற்செய்தியைப் போதிப்பதின் அவசியத்தைப்பற்றி இதைவிட அதிகமாக எப்படி வலியுறுத்திக் கூறமுடியும்? தேவனுடைய சத்தியத்தை "வேறொரு சுவிசேஷமாக" மாற்றத்துணியும் ஒரு போதகன் தேவனால் சபிக்கப்பட்டிருப்பான் என்பதை விட மேலான தண்டனை எது? மேலும் கிறிஸ்துவின் அப்போஸ்தலனான அவனானாலும் சரி அல்லது வானத்திலிருந்து வரும் ஒரு தூதனாகிலும் சரி, வேறொரு சுவிசேஷத்தைப் போதிக்க துணிந்தால் இந்த சாபத்திலிருந்து, இந்த பயங்கரமான தண்டனையிலிருந்து, தப்பிக்க முடியாது என பவுல் கூறினார். நிச்சயமாக, நற்செய்தியைப் போதிக்கும் ஊழியர்களாக தேவன் தூதர்களை நியமிக்கவில்லை-மனிதர்களுக்குத்தான் அந்தப்பொறுப்பு அளிக்கப் பட்டிருந்தது-என்பது உண்மையே. ஆனால் மேன்மையான ஒரு வானத்தின் தூதன் துணிந்து வந்து ஏற்கனவே உபதேசிக்கப்பட்ட சுவிசேஷத்திற்கு விரோதமாகப் போதித்தாலும் கூட அவனும் சபிக்கப்பட்டிருப்பான் என வலியுறுத்தும் ஒரு உதாரணமாக பவுல் கூறினார்.

இவை அனைத்தும் கர்த்தரின் உபதேசத்தை மாற்றவோ அல்லது எவ்விதத்திலாகிலும் திரித்துக் கூறாமலோ, அதில் நிலைத்திருக்க வேண்டியதின் முக்கியத்துவத்தையும் அவசியத்தையும் வற்புறுத்திச் சொல்லப் பயன்படுகின்றன. சத்தியம் ஒருவரின் ஆத்துமாவை இரட்சிக்கும்; ஆனால் தவறோ அதைத்தண்டிக்கும். கர்த்தரின் வழி ஒருவரை பரத்திற்கு இட்டுச்செல்லும்; மனிதனின் வழியோ நித்திய அழிவுக்குள் ஆழ்த்திவிடும்.

பவுலின் நாட்களிலேயே கள்ளப் போதகர்களும், தவறான "சுவிசேஷங்களும்" இருந்த உண்மை, சுவிசேஷத்தின் இந்த எச்சரிப்பு மூலம் நம்மை விழிப்படையச் செய்கிறது. இன்றைய நாளிலும்கூட அதே பிரச்சனை தொடர்கிறது! உண்மையைச் சொன்னால், இரட்சிப்படைய எண்ணற்ற வழிகளை மனிதன் சொல்லுவான், அதன் அர்த்தம் என்னவென்றால், அவர்கள் எண்ணற்ற மாறுபாடான சுவிசேஷங்களைப் போதித்து வருகின்றனர்

உண்மையான நற்செய்தியும், ஒருவன் எதையெல்லாம் அறிந்து, இரட்சிக்கப்பட்டு, பரலோகத்திற்குச் செல்ல கர்த்தர் விரும்புகிறாரோ அதுவும், தவறை ஏற்றுக் கொள்ளுவதின் விளைவுகளும் தெளிவாக அவருடைய வார்த்தையில் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், இன்றும் பலர் கர்த்தரின் விருப்பத்தைவிட மனிதனின் உபதேசத்தைக் குருட்டுத்தனமாகப் பின்பற்றுவதுதான் மிக வருத்தமான காரியமாகும், மத உலகில் இது ஒரு உண்மை என்பது மட்டுமல்ல, நமது சொந்த சகோதரர் களில் சிலரும்கூட எதிரியோடு கைகோர்த்து அவர்களுடைய கள்ள உபதேசங்களை ஏற்றுக்கொண்டு, அந்த "சுவிசேஷத்தை" "சத்தியம்" என்று

அறிவிக்கத் தொடங்கியுள்ளனர். நிச்சயமாக அவர்கள் தூதர்கள் அல்ல, ஆனால் வேறொரு சுவிசேஷத்தைப் போதிப்பதால் தேவனுக்கு முன்பாக அவர்கள் சபிக்கப்பட்டிருப்பர்.

மனிதருடைய உபதேசங்களையும் கட்டளைகளையும் போதிக்கிறவர்களை கர்த்தரே கண்டிக்கிறார். (மத்தேயு 15:9) கர்த்தாவே, கர்த்தாவே என்று சொல்லுகிற எல்லாரும் பரலோகத்திற்குச் செல்வதில்லை என்று அவர் சொல்லுகிறார். (மத்தேயு 7:21-23) மீண்டும் அவர் சொல்லும்போது, கேட்டுக்குப் போகிற பலர் விரிந்த வாசல் வழியாகவும் ஜீவனுக்குள் செல்லும் மிகச்சிலர் குறுகிய வழியாகவும் செல்லுகின்றனர் என்றார். (மத்தேயு 7:13,14). உங்கள் மத்தியில் பிரிவினை உண்டாக்குகிறவர்களை விட்டு விலகுங்கள் என்று (ரோமர் 16:17,18)ல் பவுல் சொல்லுகிறார். கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திராதவன் தேவனையுடையவன் அல்ல என்று யோவான் எழுதினார். (2 யோவான் 9).

தயவுசெய்து மாறுபாடான ஒரு சுவிசேஷத்தைப் போதிக்க ஒருபோதும் துணியாதீர்கள்.

**தமிழில் : எஸ்.எஸ். ராஜன்**

## பொது அறிவுக் களஞ்சியம்

**சந்திரனில் முதலில் காலடி எடுத்து வைத்தவர் : நீல் ஆர்ம்ஸ்ட்ராங் (அமெரிக்கா)**
**முதன் முதலில் செயற்கை கோள் விட்ட நாடு : ருஷ்யா**
**விண்வெளிக்கு முதன் முதலில் சென்றவர் : யூரிகாகரின் (ருஷ்யா)**
**முதன் முதலில் விண்வெளிக்குச் சென்ற பெண்மணி : வாலண்ட்டினா தெரஸ்கோவா**
**விண்வெளியில் முதன் முதலாக பறந்த மனிதன் : அலெக்ஸி லியோநோவ் (ருஷ்யா)**
**சந்திரனை நோக்கி விண்வெளிக் கலம் விட்ட முதல் நாடு : ருஷ்யா**
**முதல் இந்தியக் குடியரசின் தலைவர் : டாக்டர் இராஜேந்திர பிரசாத்**
**முதல் இந்தியப் பெண் பிரதமர் : திருமதி இந்திராகாந்தி**
**முதன் முதலில் நோபல் பரிசு பெற்ற இந்தியர் : ரவீந்திரநாத் தாகூர்**
**இந்திய தேசியக் காங்கிரசின் முதல் தலைவர் : W.C. பானர்ஜி**
**ஐ.நா. பொதுச்சபையின் முதல் பெண் தலைவி : திருமதி விஜயலட்சுமி பண்டிட்**
**சுதந்திர இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரல் : இராசகோபாலாச்சாரி**
**இந்தியாவில் ஆட்சி செய்த கடைசி முகலாய மன்னர் : இரண்டாம் பகதூர்ஷா**
**சுதந்திர இந்தியாவின் முதல் தரைப்படைத் தளபதி : ஜெனரல் கரியப்பா**
**முதன் முதலில் இந்தியாவில் செய்தித்தாளை தோற்றுவித்தவர் : ஜேம்ஸ் கிக்கி**
**முதல் அமெரிக்க ஜனாதிபதி : ஜார்ஜ் வாஷிங்டன்**
**இங்கிலாந்தின் முதல் பிரதம மந்திரி : வால்போல்**
**உலகிலேயே முதல் பெண் பிரதமர் : திருமதி பண்டாரநாயகா**
**இந்தியாவை முதலில் ஆக்கிரமித்த ஐரோப்பியர் : அலெக்ஸாண்டர்**
**ஆங்கிலக் கால்வாயில் நீந்திய முதல் இந்தியப் பெண்மணி : ஆரதி சாகா**
**எவரெஸ்ட் சிகரத்தை முதலில் அடைந்தவர் : டென்சிங்**

## ஜெபியுங்கள்

1. குஜராத்தில் குடும்பங்களையும், உடமைகளையும் இழந்தவர்களுக்காக
2. மதுரை எல்லீஸ்நகர் கிறிஸ்துவின் சபையார் கண்பார்வையற்றோர்களுக்காக நடத்தும் சிறப்பு கூட்டங்களுக்காக
3. சுகவீனமாய் இருக்கும், சிந்தாமணியம்மாளுக்காக

# தெரிந்து கொள்ளுங்கள்

## வேதாகமத்திற்கு வெளியே பிழையற்ற தன்மையின் சான்று

வேதாகமத்தில் மிகுதியான சரித்திரக் குறிப்புகள் உள்ளபடியால் அதனுடைய பிழையற்ற தன்மையை நாம் சரிபார்க்க முடியும். வேதாகமத்தின் பிழையற்றதன்மையைச் சரிபார்ப்பதற்கு இரண்டு விதமான சான்றுகள் உள்ளன.



(1) தொல்பொருள் ஆராய்ச்சியின் சான்று, (2) பண்டைய காலத்தில் எழுதப்பட்ட ஆவணங்களின் சான்று

### தொல்பொருள் ஆராய்ச்சியின் கண்டுபிடிப்புகளிலிருந்து கிடைக்கும் சான்று

தொல்பொருள் ஆராய்ச்சியின் எந்தக் கண்டுபிடிப்பும் ஒரு வேதாகமக் குறிப்பைத் தவறு என்று நிரூபித்தது கிடையாது என்பதை கருத்தில் கொள்வது முக்கியமாகும். உண்மையில் வேதாகமத்தைக் குறித்த 25,000 இடங்கள் தொல்பொருள் ஆராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்டு, பதிவுசெய்யப்பட்டுள்ளன. அவைகள் பலவிதமான சம்பவங்கள், மக்கள், வம்சவரலாறு போன்றவற்றைக் குறித்த வேதாகம குறிப்புகளின் பிழையற்ற தன்மையையும், நம்பகத்தன்மையையும் உறுதிப்படுத்துகின்றன. தொல்பொருள் ஆராய்ச்சி இன்றும் தொடர்கிறது; பல தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் சரித்திர இடங்களைக் கண்டுபிடிப்பதற்காக வேதாகமத்தைப் பயன்படுத்துகிறார்கள்!

### பண்டைய காலத்தின் ஆவணங்களிலிருந்து சான்று

பல பத்தாண்டுகளுக்கு முன் ஆடுகளை மேய்க்கும் ஒரு சிறுவன் பல பெரிய கல்லறைகளில் புதைத்துவைக்கப்பட்டிருந்த பண்டைய கால ஆவணங்களைக் கண்டுபிடித்தான். இந்த ஆவணங்கள் சவக்கடல் சுருள்கள் என்று அழைக்கப்பட்டன. அவைகளில் பழைய மற்றும் புதிய ஏற்பாட்டு பிரதிகளில் பல இருந்தன. அவை நல்ல நிலையிலும் இருந்தன. ஏற்கனவே இருக்கும் ஆயிரக்கணக்கான பிரதிகளுடன் அவைகளை ஒப்பிடும்போது, எந்த முக்கியமான வேறுபாடுகளும் காணப்பட வில்லை!. இந்தக் கண்டுபிடிப்பின் முக்கியத்துவம் என்னவென்றால், ஏற்கனவே உள்ள பழைய மற்றும் புதிய ஏற்பாட்டின் முழுமையான பிரதிகளைவிட சவக்கடல் சுருள்கள் 1000 வருடங்கள் பழமையானவை.

சுருங்கக்கூறினால், உலகப்பிரகாரமான எந்த இலக்கியத் தையும்விட, வேதாகமத்திற்கு அதிகமான பண்டைய கால எழுத்துச் சான்றுகள் உண்டு. பண்டைய காலங்களிலிருந்து வேதாகமம் ஒரு சிறந்த ஆவணமாக திகழுகிறது. வேதாகமம் பண்டைய கால புத்தகங்களைவிட முற்றிலுமாக நம்பத்தக்கது என்று உறுதியுடன் கூறலாம். ஆயிரக் கணக்கான வருடங்களான வேதாகமம் எந்த மாற்றத்திற்குட்படாமலும், நம்பக்கூடிய அளவிற்கு பிழையில்லாமலும் நீடித்திருக்கிறது!

## பிழையில்லாத சத்தியம்

வேதாகமம் தெய்வீக வழிநடத்துதலினால் எழுதப்பட்டது (2 தீமோ. 3:16,17) என்பதற்கு தொல்பொருள் ஆராய்ச்சியும், பண்டையகால ஆவணங்களும் ஒரு மறைமுகமான, ஆனால் போதிய நிரூபணத்தை அளிக்கிறது. கண்கூடாகக் காணக்கூடிய இந்த உண்மையான சான்றுகளில் வேதாமம் பிழையற்றதாக இருக்குமென்றால், அது தன்னுடைய ஆவிக்குரிய உண்மைகளிலும் பிழையற்றதாக இருக்குமென்பது மிகவும் நிச்சயமாகும்.

வேதாகமத்தின் பிழையற்றதன்மை மற்றும் நம்புவது ஆகியவற்றைப் பொறுத்தவரையில், அதிலுள்ள சத்தியத்தை அறிவிப்பது யார் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். தேவன் பிழையற்ற சத்தியத்தை அறிவிக்கிறார். இது உண்மை, ஏனென்றால் ஒப்புயர்வற்ற, "சத்திய தேவன்" (ஏசாயா 65:16) "பொய் சொல்ல ஒரு மனிதன் அல்ல" (எண்ணாகமம் 23:19; தீத்து 1:3, எபிரெயர் 6:18). எனவே தேவன் சத்தியமுள்ளவரானபடியால் (யோவான் 3:3; 17:3), அவருடைய வார்த்தையும் சத்தியமாகும் (யோவான் 17:17); தேவன்மீதான நம்முடைய விசுவாசத்தையும் அவ்விசுவாசத்தின் கிரியையையும் வாழ்க்கை மற்றும் ஒழுக்கத்தையும் முற்றிலுமாக வழிநடத்தும் ஒரு நம்பகமான வழிகாட்டியாக அவருடைய வார்த்தை செயல்படுகிறது.

**- Selected**



## வேத அறிவுப்போட்டி எண் 6ல் வெற்றிபெற்றவர்கள்

1. A. மேரியம்மாள் - வத்தலக்குண்டு
2. P. அலிஸ்மேரியம்மாள் - வத்தலக்குண்டு
3. V. ரவிமோகன்ராஜ் - தூத்துக்குடி
4. M. ரோஸ்மேரி - சென்னை
5. S. லலிதாபிரேமகுமாரி - மதுரை
6. M. சம்மா - ஆண்டரசன்பேட்டை
7. N. ஜேக்கப் - P.S. பாக்கம்
8. D. ரூத்மேரி - கங்கானிமேடு
9. V. கோவலன் - மதுரை
10. S. கிறிஸ்டியான் - சென்னை
11. K. தேவசகாயம் - குருஷஅகரம்

## வேத அறிவுப் போட்டி எண் 6ன் விடைகள்


| | | |
|---|---|---|
| 1. | எபிரெயு | – அப். 26:14 |
| 2. | பவுல் | – 2 கொ. 11:10 |
| 3. | வனாந்தரத்தில் | – நீதி. 21:19 |
| 4. | கவுதாரிக்கு | – எரே. 17:11 |
| 5. | யோசேப்பு | – ஆதி. 45:8 |
| 6. | யோபு | – யோபு. 16:22 |
| 7. | நெரிஞ்சிலைப் | – மீகா. 7:4 |
| 8. | எப்பாப்பிரோதீத்து | – பிலி. 2:30 |
| 9. | கிறிஸ்து | – கொலோ. 2:9 |
| 10 | நியாயப்பிரமாண | – 1 தீமோ. 1:7 |

# ஒரு வழி

## பாவத்திற்கு தேவனுடைய பரிகாரம்
## (God's solution for sin)

### பிரிவு - II

"ஏதேன் தோட்டத்தில் ஆதாம் பாவஞ்செய்தபோது, அவன் ஆவியில் மரித்தான், அவனுடைய பாவம் தேவனிடமிருந்து அவனைப் பிரித்தது (ரோமா. 5:12) அவன் ஜீவ விருட்சத்தினிடமிருந்து பிரிக்கப்பட்டான், மேலும் இப்படியாக அவனோடுகூட மனிதவர்க்கம் முழுவதும் பிரிக்கப்பட்டது. தொடர்ந்து, நாம் அனைவரும் இப்போது அவனுடைய பாவத்தின் பலனை அனுபவிக்க வேண்டும். இதன் மூலம் நாம் சரீரத்தில் மரிக்க வேண்டும் (1 கொரி. 15:20-22) மனிதனுடைய இந்த சோக சம்பவத்தின் மத்தியில், எப்படியோ பாவத்திற்கு ஒரு பரிகாரம் வருமென தேவன் வாக்குப் பண்ணினார் (ஆதி.3:15) மனிதனுடைய பாவத்திற்கு பரிகாரத்தை ஏற்படுத்துகிறவரான மேசியாவின் வருகையைக் குறித்த முன்னறிப்பினை பற்றிய நூற்றுக்கணக்காக தீர்க்கதரிசனங்கள் பழைய ஏற்பாடு முழுவதிலும் உள்ளன. இப்படியாக நம்முடைய சிருஷ்டிகரோடு அன்பின் உறவினை மறுபடியும் ஏற்படுத்தும்படி நம் அனைவருக்கும் ஒரு சந்தர்ப்பம் அளிக்கிறது. இவையெல்லாம் தேவனோடு நம்மை ஒப்புரவாக்கும்படிக்கு சிலுவையில் மரிக்கப்போகிற இயேசுவைப் பற்றிய தீர்க்கதரிசனங்களாகும். அத்துடன் நாமனைவரும் பயப்படுகிறதான சரீரமரணத்தை ஜெயிப்பதற்கு நமக்கு ஒரு வழியை ஏற்படுத்தும்படி அவர் வந்தார் (எபி. 2:14)




## வித்தின் ஆசீர்வாதம்
## (Blessing of the seed)

### பாடம் - 9

ஆபிரகாம் என்னும் பெயருள்ள ஒரு மனிதனுடைய வித்தின் மூலம் உலகத்தின் இரட்சகராக ஒருவரை உலகத்தினுள் கொண்டுவரும்படி தேவன் அவனைத் தெரிந்துகொண்டார். தேவன் அபிரகாமுக்கு "......... பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் ........ " (ஆதி 2 :3) என வாக்குப் பண்ணினார். கி.மு. 2000ல் சொல்லப்பட்ட வாக்குத்தத்ததைக் குறித்து தேவன் தொடர்ந்து தமது பிள்ளைகளுக்கு மனிதரின் பாவத்தை சுமந்து தீர்க்கும் 'ஈவு' வருகிறதாக நினைப்பூட்டினார் (ஏசா 53) இந்த வாக்குத்தத்தமானது ஆபிகாமின் சந்ததியாகிய யூதருக்கு மட்டுமல்ல ஆனால் பூமியின் சகல வம்சத்தாருக்கும் உரியதாயிருந்தது. இது மனிதவர்க்கம் அனைத்திற்கும் கொடுக்கப்பட்ட தேவனுடைய வாக்குத்தத்தமாகும்.

எனவே யார் அந்த ஈவு? பேதுரு குறிப்பிடும் போது, "நீங்கள் அந்தத் தீர்க்கதரிசிகளுக்குப் புத்திராயிருக்கிறீர்கள்; **உன் சந்ததியினாலே பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கபடும்** என்று தேவன் ஆபிரகாமுக்குச் சொல்லி, நம்முடைய முன்னோர்களோடே பண்ணின உடன்படிக்கைக்கும் புத்திராயிருக்கிறீர்கள், **அவர் உங்களெல்லாரையும் உங்கள் பொல்லாங்குகளிலிருந்து விலக்கி,** உங்களை ஆசீர்வதிக்கும்படி தேவன் தம்முடைய பிள்ளையாகிய இயேசுவை எழுப்பி, முதலாவது உங்களிடத்திற்கே அவரை அனுப்பினார் என்றான் (அப் 3:25, 26) மனுக்குலத்தை ஆசீர்வதிக்கப் போகிறதான ஆபிரகாமின் வித்து இயேசுவே அந்த ஆசீர்வாதமானது, இயேசு நமது பாவங்களிலிருந்து நம்மை விலக்கிக் காப்பதேயாகும். பவுல், "ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் வாக்குத்தத்தங்கள் பண்ணப்பட்டன; சந்ததிகளுக்கு என்று அநேகரைக் குறித்துச் சொல்லாமல், உன் சந்ததிக்கு என்று ஒருவனைக் குறித்துச் சொல்லியிருக்கிறார். அந்தச் சந்ததி **கிறிஸ்துவே** (கலா. 3:16) என்றான். எனவே அந்த வித்து இயேசு கிறிஸ்துவே ஆதாம் பாவஞ்செய்த பின் தேவன் வாக்குப் பண்ணின ஸ்திரீயின் வித்தானது சாத்தானின் தலையை நசுக்குவதாயிருந்தது (ஆதி 3:15) நம்முடைய பாவத்திற்கு நிவாரண பலியாக அவர் தம்மையே பலியாக ஒப்புக்கொடுப்பதன் மூலம் அவர் சாத்தானின் தலையை நசுக்குவார்.

**நசுக்குவதும் ஆசீர்வதிப்பதுமான வித்து**

வித்து<br>நசுக்கும் → வித்து<br>ஆசீர்வதிக்கும் → வித்து<br>சாத்தானை நசுக்கியது<br>மனிதனை ஆசீர்வதித்தது

(ஆதி. 3:15) (ஆதி. 12:3) (கலா. 3:16)

**ஆசீர்வாதம்**

இப்போது வித்திலிருந்து வருகிறதான ஆபிரகாமின் ஆசீர்வாதம் என்ன? வேதம் பதிலளிக்கிறது, "மேலும் தேவன் விசுவாசத்தினாலே புறஜாதிகளை நீதிமான்களாக்குகிறாரென்று வேதம் முன்னாகக்கண்டு : உனக்குள் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்று ஆபிரகாமுக்குச் சுவிசேஷமாய் முன்னறிவித்து". (கலா. 3:8) இந்த வாக்குத்தத்திலுள்ள சுவிசேஷமானது நற்செய்திக்கு ஒப்பிட்டுள்ளது. நம்முடைய பாவத்தின் பிடியிலிருந்து நம்மை மீட்டு தேவனோடு உறவை ஏற்படுத்துகிறதான இந்த வித்தினுடைய நற்செய்தியே அது. அந்த வித்தானது விசுவாசத்தினாலே நம்மை நீதிமானாக்குகிறது. (ரோம. 3:20; கலா 2:16) இவ்வாறாக அவருடைய இரத்தினாலே தேவனோடு ஒப்புரவாகிறோம் (ரோம. 5:10, 11) இது அவர் மேல் விசுவாசமுள்ளவர்களில் சுவிசேஷத்திற்குக் கீழ்படிய ஒப்புக் கொடுக்கிறவர்களை எவ்வாறு இயேசு ஆசீர்வதிக்கிறார் என்பதாகும். அவர் உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவாட்டுக்குட்டி (யோவா. 1:29)

**தற்சோதனை**

1. _____ சாத்தானை நசுக்கின ஆபிரகாமின் சந்ததியும், ஸ்திரீயின் வித்துமானவர் யார் ? (A) தாவீது (B) யோவான் (C) இயேசு
2. _____ பூமியிலுள்ள சகல வம்சத்தாரும் என்ன செய்யப்படும் என ஆபிரகாமுக்கு வாக்குப் பண்ணினார் ? (A) .......... ஆசீர்வதிக்கப்படும் (B) ....... இரட்சிக்கப்படும் (C) ............... பிறக்கும்
3. _____ அவனுடைய வித்து மனிதனுக்கு ஆசீர்வாதமாயிருக்குமென தேவன் அவனுக்கு அறிவித்ததாக கருதப்பட்ட ஆபிரகாமுக்கு போதிக்கப்பட்ட அந்த செய்தி எது ? (A) விசுவாசம் (B) அன்பு (C) சுவிசேஷம்

ஆம் / இல்லை : வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட வித்தினால் எல்லாரும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பார்கள் என தேவன் வாக்கு பண்ணினபடியினால், ஆசீர்வதிக்கப்படும்படி அந்த வித்தினிடம் செல்வது உனக்கு அவசியமா?

**வேதவாசிப்பு** : ஆதி. 12 :1–3; 21:12; 22:18, ஏசா. 53 கலா.3

**வேதஆராய்ச்சி** : சிலுவையைப் பற்றிய தீர்க்கதரிசனம் : ஏசா. 53; சங். 22, இயேசுவைப் பற்றிய தீர்க்கதரிசனம் : சங். 41:9; ஏசா. 7:14; 9:6, 7:34: 5, 6; 42:1–4, ஏரே. 31:15, மீகா. 5:2; ஓசியா 11:1; சகரி. 13:7, ஒப்புரவாகுதல் : ரோம. 5:10, 11, 2 கொரி. 5:19, 20; எபே. 2:16; கொலோ. 1:20

சிறுவர் பகுதி

# கீழ்ப்படிதலுள்ள சாமுவேல்

**வேதபகுதி : I சாமுவேல் 1:1 – 3:18**

எப்பிராயீம் மலைதேசத்திலே உள்ள ராமதாயீம் என்ற ஊரிலே எல்க்கானா என்ற ஒரு தேவ மனிதன் இருந்தான் அவனுக்கு இரண்டு மனைவிகள். ஒருத்திபேர் அன்னாள் மற்றவளுடைய பேர் பெனின்னாள். இதில் அன்னாளுக்கோ பிள்ளை இல்லை. அன்னாள் ஒருமுறை கர்த்தருடைய ஆலயத்திற்குப் போய் மனங்கசந்து அழுது கர்த்தாவே தேவரீர் உம்முடைய அடியாளின் சிறுமையைக் கண்ணோக்கிப் பார்த்து உமது அடியாளுக்கு ஒரு ஆண்பிள்ளையைக் கொடுத்தால் நான் அவனை உமக்கு ஒப்புக்கொடுப்பேன். அவன் தலையின் மேல் சவரகன் கத்தி படுவதில்லை என்று பொருத்தனை பண்ணினாள்.



வெகுநேரம் ஜெபித்த இந்த அன்னாளைப் பார்த்து அங்கு ஊழியம் செய்து வந்த ஏலி என்பவன் நீ எதுவரைக்கும் வெறித்திருப்பாய்? உன் குடியை உன்னைவிட்டு விலக்கு என்றான். அதற்கு அவள் அப்படியல்ல, என் ஆண்டவனே

நான் மனக்கிலேசமுள்ள ஸ்திரீ. நான் திராட்சரசமாகிலும் மதுவாகிலும் குடிக்கவில்லை, நான் கர்த்தருடைய சந்நிதியில் என் இருதயத்தை ஊற்றிவிட்டேன் என்றாள். இதைக்கேட்ட ஏலி உன் ஜெபத்தின்படியே உனக்கு அவர் கட்டளையிடுவார் என்றான். அதன்பின்பு அவள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப்பெற்று அவனுக்கு சாமுவேல் என்று பேரிட்டாள். அவனைப் பால் மறக்கப் பண்ணின பின்பு தான் செய்த பொருத்தனையின்படியே தேவ சமூகத்தில் வளர விட்டாள். சாமுவேல் கர்த்தருடைய சந்நிதியில் வளர்ந்தான். ஏலியோ மிகுந்த கிழவனாயிருந்தான் அவன் பிள்ளைகளோ பேலியாளின் மக்களாயிருந்து அநுதினமும் கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்து வந்தார்கள்.

ஒரு நாள் சாமுவேல் கர்த்தருடைய ஆலயத்திலே தேவனுடைய விளக்கு அணைந்து போகு முன்னே படுத்துக்கொண்டிருந்தான். அப்பொழுது கர்த்தர், சாமுவேலைக் கூப்பிட்டார் அதற்கு அவன் இதோ, இருக்கிறேன் என்று சொல்லி ஏலியினிடத்தில் ஓடி, என்னைக் கூப்பிட்டீரோ? என்றான். அதற்கு ஏலி நான் கூப்பிடவில்லை என்றான் பின்பு திரும்பவும் படுத்துக் கொண்டான். மறுபடியும் கர்த்தர் சாமுவேலே என்று கூப்பிட்டார் உடனே எழுந்து ஏலியினிடத்தில் போய் என்னைக் கூப்பிட்டீரோ? என்றான். அவனோ, என் மகனே, நான் உன்னைக் கூப்பிடவில்லை என்றான். திரும்பவும் படுத்துக் கொண்டான் கர்த்தர் மறுபடியும் மூன்றாம் விசை சாமுவேலே! என்று கூப்பிட்டார். அவன் எழுந்து ஏலியினிடத்தில் போய் இதோ இருக்கிறேன், என்னைக் கூப்பிட்டீரோ? என்றான். ஏலி சாமுவேலைக் கர்த்தர் கூப்பிடுகிறார் என்று அறிந்து நீ போய்ப் படுத்துக் கொள் உன்னைக் கூப்பிட்டால் நீ! கர்த்தாவே சொல்லும் அடியேன் கேட்கிறேன் என்று சொல் என்றான். அந்தப்படியே போய் திரும்பவும் படுத்துக் கொண்டான் கர்த்தர் வந்து முன்போல, சாமுவேலே, சாமுவேலே என்று கூப்பிட்டார் அவனோ, சொல்லும் அடியேன் கேட்கிறேன் என்றார். கர்த்தர் ஏலியின் குடும்பத்தார் செய்யும் அக்கிரமத்தை சாமுவேலுக்கு தெரியப்படுத்தினார். மறுநாள் காலையில் ஏலி சாமுவேலை பார்த்து கர்த்தர் என்ன சொன்னார்? மறைக்காமல் சொல்லும் என்றான். அப்படியே ஒன்றையும் மறைக்காமல் ஏலிக்கு அறிவித்தான். ஏலியோ அதைக்கேட்டு கர்த்தர் அவர் பார்வைக்கு நலமானதைச் செய்வாராக! என்றான்.

அன்பான தம்பி, தங்கைகளே பார்த்தீர்களா! சாமுவேலை பெற்ற அவன் தாய், தேவனோடு செய்த பொருத்தனையின் படியே அவனைக் கர்த்தருக்கு ஏற்றவிதமாய் வளர்த்து, தேவ சந்நிதியில் கொண்டுபோய் விட்டாள். அதைப்போல உங்களை பெற்ற அருமையான பெற்றோர்களும் அப்படியே கண்ணீர் வடித்து, கர்த்தரை நோக்கி ஜெபித்து, உங்களை கர்த்தருக்கு ஏற்ற போதனையில் வளர்த்திருக்கிறார்கள். அப்படி உங்களை பத்துமாதம் சுமந்து வளர்த்த தாயையும், தகப்பனையும் கனம்பண்ணுகிறீர்களா? ஏலியின் குமாரர்கள் ஓப்ணி பினெகாசும் தாய் தகப்பனுக்கு கீழ்படியாமல் பேலியாளின் மக்களாக ஜீவித்தார்கள். அதைப்போல நீங்கள் இல்லாமல் அன்னாளின் மகன் சாமுவேலைப்போல சொல்லும் அடியேன் கேட்கிறேன் என்ற கீழ்ப்படிதலோடு கர்த்தருக்கும் உங்கள் பெற்றோருக்கும் கீழ்ப்படிந்து நடந்து கொள்ளுங்கள். அப்பொழுது கர்த்தர் உங்களை சாமுவேலைப்போல ஆசீர்வதிப்பார்.

***<u>மனப்பாட வசனம் :</u>***

" கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்கு பிரியமாயிருக்குமோ? பலியைப் பார்க்கிலும், கீழ்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப் பார்க்கிலும் செவிகொடுத்தலும் உத்தமம்"

*(1 சாமுவேல் 15:22)*

பெண்கள் பகுதி

# உயிரோடே செத்தவள்

# Dead while she Lives

"அன்பான சகோதரிகளே, மேலே குறிப்பிடப்பட்டுள்ள இவள் யார்? - சுகபோகமாய் வாழ்கிறவள் தானே! 1 தீமோ 5:6ல் 'சுகபோகமாய் வாழ்கிறவள் உயிரோடே செத்தவள்' என பவுல் குறிப்பிடுகிறார். இன்றைய நவீன நாகரீக உலகில் சுகபோகமான வாழ்வை விரும்பாதவர் யாருண்டு? அனைத்து சுகபோகங்களையும் அநுபவிக்கிறவர்களைத் தானே ஆசீர்வதிக்கப் பட்டவர்கள் என சமுதாயம் கூறுகிறது. ஆனால் வேதமோ அப்பேர்பட்டவர்களை உயிர் இருந்தும் செத்தவர்கள் என அழைக்கிறது. இந்த சுகபோக வாழ்வை நாடி ஓடுவதற்குக் காரணம் தான் என்ன? நம்மிடையேயுள்ள இச்சையே! இதன் விளைவோ மரணம் என வேதம் கூறுகிறது.



ஆதியாகமம் 3:5-6ல் ஏவாளின் இச்சையைக் குறித்து வாசிக்க முடிகிறது. இங்கு ஏவாள் சாத்தானின் உபதேசத்தை நம்பி தேவனுடைய உபதேசத்திற்குக் கீழ்ப்படியாமல் வஞ்சிக்கப்படுகிறாள். அவளுக்குள், தானும் தேவர்களைப் போலிருக்க வேண்டுமென்ற இச்சை. ஆனால் தேவனாகிய கர்த்தரோ அவளையும் அவளது புருஷனையும் ஒரு குறையுமிராதபடி ஆசீர்வதித்து ஏதேன் என்ற மகிழ்ச்சி நிறைந்த இடத்திலே வைத்திருந்தார். இவளோ, தேவனாகிய கர்த்தர் விலக்கி வைத்த "...... அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும் புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து தன் புருஷனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான்" (ஆதி. 3:6) முடிவோ, இருவரும் மகிழ்ச்சி நிறைந்த அந்த இடத்திலிருந்து தேவனாகிய கர்த்தரால் துரத்தப்பட்டார்கள். இவ்விதமாக ஆவிக்குரிய மரணம் வந்தது. ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாயானவள், தான் தேவனுடைய கட்டளை மீறினதுமன்றி தன் புருஷனையும் மீறப்பண்ணினாள்.

சகோதரிகளே, இன்று அநேகர் இப்பிரபஞ்சத்தின் மேல் ஆசை வைத்து, அதை வாங்க வேண்டும், இதை வாங்க வேண்டும் என்று மற்ற ஸ்திரீகளோடு ஒப்பிட்டுப்பார்த்து தானும் அவர்களைப் போல் உடுத்த வேண்டும், அணிய வேண்டும், சுகபோக வாழ்வு வாழ வேண்டும் என்று கணவனை தொந்தரவு பண்ணி தேவனுக்குப் பிரியமில்லாதவற்றைச் செய்யும்படி தன் கணவனையும் ஏவாளைப் போல் பாவஞ்செய்யப் பண்ணுகின்றனர். ஆனால் நாமோ உலகத்தாரைப் போல் அல்லாது

ஆவியின் சிந்தையுள்ளவர்களாயிருக்கப் பிரயாசப்படுவோம். ஏனெனில் ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம்.

மேலும், லோத்தின் மனைவி எப்படி உப்புத்தூணானாள் என்று பார்ப்போம் இவளது கணவனை நீதிமானாகக் கண்ட தேவனாகியக் கர்த்தருடையதூதர் " .................... லோத்தை நோக்கி : பட்டணத்திற்கு வரும் தண்டனையில் நீ அழியாதபடிக்கு எழுந்து, உன் மனைவியையும், இங்கே இருக்கிற உன் இரண்டு குமாரத்திகளையும் அழைத்துக் கொண்டு போ என்று சொல்லி, அவனைத் துரிதப்படுத்தினார்கள் ....... கர்த்தர் அவன் மேல் வைத்த இரக்கத்தினாலே, அந்த புருஷர் அவன் கையையும், **அவன் மனைவியின் கையையும்,** அவன் இரண்டு குமாரத்திகளின் கையையும் **பிடித்து, அவனைப் பட்டணத்திற்கு வெளியே கொண்டு போய் விட்டார்கள்.** அவர்களை வெளியே கொண்டு போய் விட்டபின்பு அவர்: உன் ஜீவன் தப்ப ஓடிப்போ, பின்னிட்டுப் பாராதே ........ என்றார்" (ஆதி. 19:15-17) ஆனால் லோத்தின் மனைவியோ பின்னிட்டுப் பார்த்து உப்புத்தூண் ஆனாள். பின்னிட்டுப் பார்க்கக் காரணம் என்னவாயிருக்கும்? தான் சவதரித்து வைத்திருந்த வீடு, வாசல் போன்ற தன் ஆஸ்தியெல்லாம் அழியப் போகிறதே என நினைத்து பின்னிட்டுப் பார்த்திருப்பாளோ? சிந்தியுங்கள், சமீபத்தில் குஜாரத்தில் எவ்வளவு பயங்கரமான துயரச்சம்பவம் நிகழ்ந்துவிட்டது! கோடி, கோடியாய் சம்பாதித்து வைத்திருந்த தங்கள் ஆஸ்தியோடு கூட புதையுண்டு போனார்களே! அவர்களது ஆஸ்தி அவர்களைக் காப்பாற்றியதா? இயேசு லூக். 12:15ல் "...................... ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல என்றார்". ஆம் அன்பான சகோதரிகளே, அநித்தியமான உலகப்பொருட்களின் மேல் நம் கண்களைப் பறக்க விடாதிருப்போம். கலப்பையின் மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டு பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவன் அல்ல. ஒருவரும் கெட்டுப் போவது தேவனுடைய சித்தமல்ல. அன்று நோவாவை குடும்பத்தோடு அழிவிலிருந்து காப்பாற்றினார், லோத்தை மட்டுமல்ல அவன் குடும்பம் முழுவதையும் காப்பாற்றவே விரும்பினார், ஏவாளையும் ஆதாமையும் ஆசீர்வதித்து மகிழ்ச்சியுடன் வைத்திருந்தார். ஆனால் இந்த ஏவாள் புசிக்க வேண்டாமென்று விலக்கின கனியைப் புசித்து கட்டளையை மீறினது போல் லோதத்தின் மனைவியும் பின்னிட்டுப் பாராதே என்ற கட்டளையை மீறி இருவரும் பாவஞ்செய்து மோசம் போனார்கள்.

சப்பீராளைப் பாருங்கள், அவளும் இவ்வுலக ஆஸ்தியின் மேல் ஆசை வைத்து, நிலத்தின் கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்து வைத்து, பரிசுத்த ஆவிக்கு விரோதமாய் பாவஞ்செய்து, சாத்தான் தன் இருதயத்தை நிரப்ப இடம் கொடுத்து தன் ஜீவனை இழந்து போனாள். (அப். 5.3-10)

இவ்வாறாக வேதத்தில் அநேக திருஷ்டாந்தங்களைக் காணலாம். இவைகளெல்லாம் நாம் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ளும்படி நம்மை

எச்சரிக்கின்ற திருஷ்டாந்தங்களாகும். அன்பான சகோதரிகளே, உலக சம்பத்துக்களை அளவில்லாமல் பெற்று வாழ்கின்ற ஸ்திரீகளைப் பாராதிருப்போம். சுகபோகமாய் வாழ்கிற அவர்களெல்லாரும் உயிரோட செத்தவர்கள். நம் நகோமியோ கணவனை இழந்து, செல்வங்களை இழந்து, தன் இரண்டு மருமக்களை பார்த்து கர்த்தர் உங்களுக்கு தயை செய்வாராக என்று அனுப்பி விட்ட போதிலும், சுகவாழ்வை வெறுத்து வேதனையை பொறுமையுடன் சுமந்து கொண்டு தன் மாமியை பார்த்து நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன்: நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன்; உம்முடைய ஜனம், என்னுடைய ஜனம்; உம்முடைய தேவன் என்னுடைய தேவன்" (ரூத் 1:16) என்று கூறிய ரூத்தைப் பார்ப்போம் இன்றைய நாட்களில் நீங்கள் எப்படிப்பட்டவர்களாய் இருக்கிறீர்கள்? மேலும், அரண்மனை வாழ்வை வெறுத்து, அநித்தியமான பாவசந்தோஷங்களை அநுபவிப்பதைப் பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அநுபவிப்பதையே தெரிந்து கொண்டு இனி வரும் பலன் மேல் நோக்கமாயிருந்து எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணின மோசேயையும் பார்ப்போம். இனி காலம் செல்லாது. இயேசு சீக்கிரம் வருகிறார். நித்திய ஜீவனைப் பற்றிக் கொள்வோமாக!.

**J. குளோரி அர்ஜுனன்**

**சென்ற மாத ஒரு வழி பாடம் 1–8**
**பகுதி–1ன் இறுதித் தேர்வு விடைகள்**

1.B, 2.A, 3.B, 4.D, 5.A, 6.C, 7.A, 8.A, 9.C, 10,C, 11.B, 12.C, 13.B
14.B, 15.A, 16.A, 17.D, 18.C, 19.A, 20.B

**வாசகர் கடிதம்**

**இயேசுவின் நாமத்தில் ஸ்தோத்திரம்,**

........... 1997 முதல் 1998 வரை உள்ள 'வேர்ட் ஆப் கிரைஸ்ட்' மாத இதழை பைண்டிங் செய்துள்ளோம். இப்பொழுது எங்கள் வாலிபர்களுக்கு பிரசங்கம் பண்ண அது மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. உங்கள் பத்திரிக்கையை தொடர்ந்து அனுப்புமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு,
D. Yesudass

# சிலுவையின் வெளிப்பாடுகள்

## இயேசு கிறிஸ்து :

உலகத்தில் வந்தார்
1 தீமோ. 1:15, மத். 20:28

மாம்சத்தில் பிறந்தார்
யோவா 1:14, 1 யோ. 4:23

ஸ்திரியினிடத்தில் பிறந்தார்
கலா 4:5, ஏசா 7:14

மனுஷ குமாரனானார்
பிலி 2:5–8 லூக் 19:10


மனிதர்களாய் புறக்கணிக்கப்பட்டார்
யோவா 1:10, 12 ஏசா 53:3

துக்கம் நிறைந்த வருமானார்
ஏசா. 53:3, மத். 23:37

நமக்காக பாவமானார்
2 கொரி 5:21, 1 பேது. 2–22–24

மரணத்துக்குள்ளாக்கப்பட்டார்
லூக் 24:46; மத் 16:21

பூமியின் மேல் சாபமானார்
கலா. 3:13, ஏசா 53:7, 8



## ஏனென்றால் நாம் :

பரலோகத்தில் பிரவேசிக்கலாம்
யோவா 14:1–3, 2 கொரி 5:1

ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கலாம்
யோவா 3:5, 1 பேது 1:23

தேவனால் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கலாம்
யோவா 1:11–13 1 யோ. 5:4

தேவனுடைய பிள்ளைகளாயிருக்கலாம்
1 யோ 3:1–2 கலா 4:7

தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கலாம்
எபே 1:6, அப் 10:35

மகிழ்ச்சியுடனும், சந்தோஷத்துடனுமிருக்கலாம்
பிலி 4:4, 1 பேது 4:13

நீதிமான்களாக்கப்பட்டிருக்கலாம்
2 கொரி. 5:11, 1 யோ. 3:7

ஜீவனுள்ளவர்களாக்கப்பட்டிருக்கலாம்
கலா. 3:13, எபே 2:1

எல்லாவற்றிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கலாம்
கலா. 3:14, வெளி 14:13

*- Dillard Thurman*

## அந்த நாளையும், அந்த நாழிகையும், பிதா தவிர மற்றொருவனும் அறியான் பரலோகத்திலிருக்கிற தூதர்களும் அறியார்கள் குமாரனும் அறியார்

## But of that day and hour no one knows, Neither their Angels in heaven nor the sun, But only the father

*Sunny David*

இந்த வாக்கியத்தை சொன்னவர் யார்? நிச்சயமாக கிறிஸ்துவே, இந்த வசனத்தை கிறிஸ்து மாற்கு 13:32இல் சொல்லியிருக்கிறார். இதை வாசிக்கும் பொழுது கிறிஸ்துவினுடைய சீஷர்கள் யூதர்களுடைய தேவகாரியங்களை சுட்டிக்காட்டியதையும் தேவாலயத்தின் கட்டிடக்கலையை புகழ்ந்து பேசியதையும் அறிந்துக் கொள்ளலாம். இயேசு கிறிஸ்துவும், கி.பி. 70ஆம் ஆண்டில் அவருடைய சீஷர்கள் வாழ்ந்த காலத்தில் நிகழக்கூடிய யூதர்களின் புனித நகரமான எருசலேம் மற்றும் பல தேவால்யங்களில் அழிவின் வருகையை குறித்தும் அவர்களிடம் சொல்லுவது இதுவே சரியான தருணம் என்று கண்டார். இயேசு கிறிஸ்து தன்னுடைய சீஷர்களிடம் இந்த பெரிய கட்டிடங்களை காண்கிறீர்களே, ஒரு கல்லின் மேல் ஒரு கல் இராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டு போகும் என்றார். (மாற்கு 13:2) அப்பொழுது அவருடைய சீஷர்கள், கிறிஸ்து இவ்வுலகத்தின் முடிவு குறித்தும், அவர் திரும்ப வரும் பொழுது எல்லாம் அழிந்து விடும் என்பதைக் குறித்தும் சொல்லுகிறார் என்று நினைத்துக் கொண்டார்கள். அப்பொழுது சீஷர்கள் இயேசுவை நோக்கி இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? இவைகளெல்லாம் நிறைவேறும் காலத்துக்கு அடையாளம் என்ன? எங்களுக்கு சொல்ல வேண்டும் என்றார்கள் (மாற்கு 14:3) மத்தேயு 24:3-ல் உள்ளபடி அவர் ஒலிவமலையில் உட்கார்ந்திருக்கையில் சீஷர்கள் அவரிடத்தில் தணித்து வந்து, இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? உம்முடைய வருகைக்கும் உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? எங்களுக்கு சொல்ல வேண்டும் என்றார்கள் இந்த அதிகாரம் முழுவதையும் படிக்கும் பொழுது, எப்படி எருசலேம் பட்டணம் அழியும் என்பதைக் குறித்தும், நியாத்தீர்ப்பை குறித்தும், அவர் கொடுத்த அநேக அடையாளங்களை அறிந்துக் கொள்ளலாம். அவர்மேல் உள்ள அவிசுவாசத்தினால் யூதர்களின் புனித நகரத்தினுடைய அழிவின் வருகையை குறித்து மிகவும் முக்கிய அடையாளங்களின் மூலம் சொல்லியிருந்தார். வரப்போகிற அழிவைகுறித்து, அவருடைய சீஷர்களை, பிதா வெளிப்படுத்திய மொழியின் மூலமர்கவும் எச்சரிக்கை செய்திருந்தார். இவையெல்லாம் கிறிஸ்துவிற்கு பிறகு 70ஆம் ஆண்டில் நிறைவேறியது.

ஆனால் அவர்களுடைய இரண்டாவது கேள்வியான உலகத்தின் முடிவுக்கும் கிறிஸ்துவினுடைய வருகைக்குமான அடையாளம் என்ன? என்ற கேள்விக்கு பதிலளிக்கையில் "அந்த நாளையும், அந்த நாழிகையையும் பிதா தவிர மற்றொருவரும் அறியான், பரலோகத்திலிருக்கிற தூதர்களும் அறியார்கள், குமாரனும் அறியார் என்றார். அவர் அப்பொழுது சொன்ன வார்த்தைக்கும் இப்பொழுது மனிதர்கள் உபதேசிப்பதற்கும் எவ்வளவு பெரிய வித்தியாசம் பாருங்கள்? இவர்கள் கிறிஸ்துவினுடைய வருகையை குறித்து நாட்களையும், நேரங்களையும் சொல்லி உலகமுழுவதிலுமுள்ள

அநேகரை வஞ்சித்துக் கொண்டிருக்கிறார்கள். இனிமேலும் அப்படிப்பட்ட கள்ள போதகர்களுடைய உபதேசத்தை நம்ப வேண்டாம். தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனுஷசாயலான இயேசுகிறிஸ்துவிற்கே அவருடைய வருகையைக் குறித்து தெரியாது என்றும், தேவதூதர்களும் அறியார்கள் என்றும் கிறிஸ்துவே சொல்லியிருக்கிறார். (பிலிப்பியர் 2:7) இப்படியிருக்க, எப்படி பூமியில் உள்ள ஒரு மனிதன் கிறிஸ்துவினுடைய வருகையை முன்னறிவிக்கக் கூடும்? அப்படிப்பட்டவர்கள் அனைவரும் பொய்யர்கள். இவர்கள் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள். (வெளி 21:8) பொய்யை விரும்பி, கேட்கிறவர்களுக்கும் அதை நம்பி நடைமுறையில் கையாள்பவர்களுக்கும் இதே நிலை தான் உண்டாகும் (வெளிப்படுத்தல் 22:15).

இன்னும் கிறிஸ்துவினுடைய இரண்டாம் வருகையை குறித்து வேதாகமம் என்ன போதிக்கிறது என்பதை உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன் மத்தேயு 24:36-37இல் இயேசு கிறிஸ்து இவ்வாறு உரைக்கிறார் அந்த நாளையும் அந்த நாழிகையையும், என் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான். பரலோகத்திலிருக்கிற தூதர்களும் அறியார்கள். நோவாவின் காலத்தில் எப்படி நடந்ததோ அப்படியே மனுஷகுமாரன் வரும் காலத்திலும் நடக்கும் எப்படியெனில் ஜலபிரளயத்துக்கு முன்னாள் நோவா பேழைக்குள் பிரவேசிக்கும் நாள் வரைக்கும் ஜனங்கள் புசித்தும் குடித்தும் பெண்கொண்டும், பெண்கொடுத்தும் ஜலப்பிரளயம் வந்து அனைவரையும் வாரிக்கொண்டு போகுமட்டும் உணராதிருந்தார்கள், அப்படியே மனுஷகுமாரன் வருகிறகாலத்திலும் நடக்கும். இதைக்குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் எழுதும்பொழுது, சகோதாரரே இவைகள் நடக்கும் காலங்களையும் சமயங்களையும் குறித்து உங்களுக்கு எழுதவேண்டுவதில்லை. இரவிலே திருடன் வருகிற விதமாய் கர்த்தருடைய நாள் வருமென்று நீங்களே நன்றாய் அறிந்திருக்கிறீர்கள். சமாதானமும் சவுக்கியமும் உண்டென்று அவர்கள் சொல்லும் போது கர்ப்பவதிகளுக்கு வேதனை வருகிறது போல, அழிவு சடிதியாய் அவர்கள்மேல் வரும் அவர்கள் தப்பிபோவதில்லை (1 தெசலொனிக்கேயர் 5:1-3)

அப்போஸ்தலர் 17:30-31 இல் அறியாமையுள்ள காலங்களை தேவன் காணாதவர் போலிருந்தார். இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷர் எல்லாருக்கும் கட்டளையிடுகிறார். மேலும் ஒரு நாளை குறித்திருக்கிறார் அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக்கொண்டு பூலோகத்தை நீதியாய் நியாயம் தீர்ப்பார் ஆனால் எப்பொழுது அவர் வருவார் அந்த நாளையும், நாழிகையையும் ஒருவனும் அறியான். மனுஷகுமாரன் வரும் நாளையாவது, நாழிகையையாவது நீங்கள் அறியாதிருக்கிறப்படியால் விழித்திருங்கள் (மத்தேயு 25:13). ஆம் அவர் வருவார் என்று நமக்குத் தெரியும் ஆனால் எந்த நாளில் எந்த நாழிகையில் அவர் வருவார் என்பது நமக்குத் தெரியாது. அந்த நாளையும், நாழிகையையும் மனிதனுக்கு வெளிப்படுத்தவில்லை ஏனென்றால் அவருடைய வருகையின்பொழுது நாம் ஆயத்தமாகி அவரை அழைக்க தயாராக வேண்டுமென்று அவர் விரும்புகிறார்.

**தமிழில் : ஜான் பிரபுதாஸ்**

2 பேதுரு | **புதிய ஏற்பாடு** | 2 PETER

**புத்தகங்களுக்கு குறிப்புகள்**

பொருள் : கிருபையில் வளரவேண்டும்
ஆக்கியோன் : பேதுரு
காலம் : கி.பி. 67

**திட்டவரைக் குறிப்பு :**

A. *கிறிஸ்தவ வளர்ச்சிக்குரிய இரகசியம் எது?* *அதி 1*
B. *வளர்ச்சியை தடைசெய்வது எது?* *அதி 2*
C. *வளர்ச்சியின் முடிவு எது?* *அதி 3*

***சிறப்புச் செய்தி :***

**கிறிஸ்துவின் சாயலில் வளர**

7 சகோதர சிநேகம்
6 தேவபக்தி
5 பொறுமை
4 இச்சையடக்கம்
3 ஞானம்
2 தைரியம்
1 விசுவாசம்

***வளருவதற்கு வளமான வாக்குறுதிகள்!***

***வரலாற்று பின்னணி :***

*இந்த நிருபம் முந்தையதைவிட கடினமான கிரேக்க சொற்களால் நிரம்பியிருக்கிறது. விருத்தசேதனகொள்கைக்காரர்கள், உலக பொருளுக்காக கிறிஸ்தவபணியை விலைபேசும் விசுவாச துரோகிகள். இவர்களை அடையாளம் காட்டவும், தேவதாசர்களை ஆழமான விசுவாசத்தில் உறுதிப்படுத்தவும் எழுதப்பட்டுள்ளது. யூதாவின் நிருபத்தில் காணப்படும் வசனங்களும் அப்படியே இந்நிருபத்திலும் பயன்படுத்தப்பட்டுள்ளது.*

*2 பேதுரு 2:1, 2, 9-17 யூதா 4, 11,12, 18 ....*

*இந்த நிருபத்தில் அப்போஸ்தலனாகிய பவுலைக்குறித்து பேசுகிறார்.*

*2 பேதுரு 3:15, 16*

*கிறிஸ்துவின் வருகை திட்டமாக போதிக்கப்பட்டுள்ளது.*

***– Selected***

# வேத அறிவுப் போட்டி எண். 7

குறிப்பு :

வேத அறிவுப் போட்டியில் கலந்து கொள்ளும் ஒவ்வொருவரும் அஞ்சல் அட்டையில் கீழ்கண்ட கேள்விகளுக்கு வேத வசன ஆதாரத்துடன் விடைகளை இம்மாதம் இறுதிக்குள் எழுதி அனுப்புங்கள். அத்துடன் உங்கள் பதிவெண்ணையும் மறக்காமல் எழுதுங்கள். 12 போட்டியில் வெற்றி பெற்று முதலாவது வருபவருக்கு சிறப்பான பரிசு காத்திருக்கிறது. தயவு செய்து உங்கள் சுயமுயற்சியில் கண்டு பிடியுங்கள்.

1. எல்லா நதிகளும் சமுத்திரத்திலே ஓடி விழுந்தும் எது நிரம்பாது?
2. கோபம் எவனைக் கொல்லும் ; பொறாமை எவனை அதம் பண்ணும்?
3. சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கிவைக்கிற மனுஷருடைய எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்துக்கும் விரோதமாய், தேவகோபம் எதிலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது?
4. கிறிஸ்துவின் சுவிசேஷத்தைச் செலவில்லாமல் ஸ்தாபிப்பதே எனக்குப் பலன் என்று சொன்ன அப்போஸ்தலன் யார்?
5. ஒருவன் மல்லயுத்தம் பண்ணினாலும், சட்டத்தின்படி பண்ணாவிட்டால் என்ன செய்யப்படான்?
6. நான் முதிர் வயதுள்ளவனாகவும், இயேசு கிறிஸ்துவினிமித்தம் இப்பொழுது கட்டப்பட்டவனாகவும் இருக்கிறபடியால் என்று பவுல் யாருக்கு எழுதுகிறார்?
7. ஒருவன் தன் நாவை அடக்காமல், தன் இருதயத்தை வஞ்சித்து, தன்னைத் தேவபக்தியுள்ளவனென்று எண்ணினால் அவனுடைய தேவபக்தி எப்படியிருக்கும்?
8. ஏன் ஒருவனைப் படைத்தார்?
9. சமுத்திரத்தின் தண்ணீர்களை வரவழைத்து அவைகளைப் பூமியின் விசாலத்தின் மேல் ஊற்றுகிறவர் யார்?
10. என் கட்டளைகளின்படி நடந்து, என் நியாயங்களைக் கைக்கொண்டு, உண்மையாயிருப்பானாகில் அவனே யார் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்?

## நடப்புச் செய்திகள்

*1. தமிழக சட்டசபைக்கு மே மாத இறுதியில் தேர்தல். 5 மாநிலத்துக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்த கமிஷன் திட்டம்.*

*2. குஜராத் பூமி அதிர்ச்சியை கேள்விப்பட்டு உலகநாடுகள் கவலை.*

*3. இந்தியன் வங்கியில் 26 ஆயிரம் ஊழியர்கள் 'விஆர்எஸ்' வாங்க ரெடி.*

*4. 60 கோடி பேருக்கு ரேஷன் சர்க்கரை இனி இல்லை! மத்திய அரசு அதிரடி அறிவிப்பு. ஏப்ரல் மாதம் முதல் அமலாகிறது.*

*5. ஒரு நாள் கிரிக்கெட் தொடரில் 300 போட்டிகளுக்கு மேல் விளையாடும் மூன்றாவது நபர் என்ற பெருமையை ஆஸ்திரேலியா கேப்டன் ஸ்டிவ்வாக் பெற்றுள்ளார்.*

Owned and published by B. Arjunan from 17.2.102D/5, Rajan Nagar, Batlagundu - 624 202. and Printed by V.D. Thankachan at Novelty Press, 3. Dhanappa Mudali street, Madurai-625 001.
**Editor : B. Arjunan.**

**எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க அன்புடன் அழைக்கிறோம்.**



ஞாயிறு ஆராதனை : காலை 9.00 மணி

வியாழன் வேதவகுப்பு : மாலை 6.00 மணி

All are Welcome


**கிறிஸ்துவின் சபை**

17.2.102-D/5, ராஜன் நகர்
வத்தலக்குண்டு – 624 202.
திண்டுக்கல் மாவட்டம்
✆ : (04543) 23278

**Editor**
**THE WORD OF CHRIST**
Post Box No.5,
Batlagundu-624 202.

**Monthly Magazine**

**FOR FREE DISTRIBUTION ONLY**



# HEAR THE VOICE OF TRUTH

## ON RADIO SRILANKA ALL INDIA SERVICE

| LANGUAGE | DAY'S | TIME | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| **HINDI** | Sunday<br>Thursday | 8.45 p.m 9.00 p.m<br>9.00 p.m 9.15 p.m | Box. 3815<br>New Delhi - 110 049 | SUNNY DAVID |
| **ENGLISH** | Friday | 7.45 p.m 8.00 p.m | Box. 3815<br>New Delhi - 110 049 | J.C. CHOATE |
| **TELUGU** | Sun,Mon<br>Tue,Thu | 2.00 p.m 2.15 p.m | Box. 80<br>Kakinada - 533 001 | JOSHUA GOOTAM |
| **TAMIL** | Sunday,<br>Tuesday,<br>Thursday<br>Friday | 6.45 p.m 7.00 p.m<br>5.30 p.m 5.45 p.m<br>5.45 p.m 6.00 p.m<br>5.30 p.m 5.45 p.m | Box. 8405<br>Bangalore - 560 084 | P.R. SWAMY |
| **MALAYALAM** | Friday | 3.45 p.m 4.00 p.m | Sunny Meads Lane,<br>Behind Sanskrit College,<br>Trivandrum - 695 034 | P.K. VARGHESE |
| **KANNADA** | Sunday | 1.45 p.m 2.00 p.m | 3/5, 7th A Main, Tatasilk Farm<br>Bangalore - 560028 | ROBERT RATHNAKAR |

Please write to these addresses for Bible Correspondence Course, Magazines and other Christian Literature in Language

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST